தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

மலர். 7 திருவள்ளுவர் ஆண்டு 2019 - வைகாசி 1 - 14-5-88 இதழ். 2

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் மேதகு தமிழக ஆளுநர்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் புதிய வளாகத்தில் உரு.14 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மகளிர் விடுதித் திறப்பு விழா 27-4-'88 புதன் அன்று மாலை நடைபெற்றது. இச் சிறப்பு நிகழ்ச்சியில் மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர் தம் துணைவியார் உடன் கலந்து கொண்டு சிறப்பித்தார். ஆளுநருக்கு ஆரத்தி யுடன் அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. துணைவேந்தர் டாக்டர் ச.அகத்தியலிங்கம் ஆளுநருக்கு மாலை அணி வித்தார். பின் ஆளுநர் விடுதியைத் திறந்து வைத்துக் குத்து

விளக்கேற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து மேதகு ஆளுநர் புதிய வளாகத்திலுள்ள பல்கலைக்கழக நூலகத்தைப் பார்வையிட்டு மகிழ்ந்தார்.

பின்னர்ப் பல்கலைக்கழகத்தின் அரண்மனைவளாகத்தில் நடைபெற்ற புதிய நூல்கள் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டார். நிகழ்ச்சியில் ஆளுநரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், பேராசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் குழுமியிருந்தோர் இருமருங்கும் செறிந்திருந்து மகிழ்ச்சி யோடு வரவேற்றனர்.

துணைவேந்தரவர்களின் முறையான வரவேற்புரையுடன் விழா தொடங்கியது. ஆளுநர் தம் உரையில் ....

"உலகிலுள்ள நான்கு உயர்தனிச் செம்மொழிகளில் தமிழும் ஒன்று"

- எனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்,

"நான் பதவியேற்றவுடனேயே இச் சிறந்த மொழி யின் மேம்பாட்டிற்காக நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டேன். தமிழ்மொழி, கலை, சிற்பம், இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடும் இப் பல்கலைக் கழகத்தின் மேம்பாட்டிற்கு உரிய கருத்துக் களைக் கூறுமாறு துணைவேந்தரிடம் கேட்டேன். இப் பல்கலைக் கழகத்திற்கு என்னுடைய ஆதரவு என்றும் உண்டு என்று நான் அவரிடம் உறுதி கூறியிருக்கிறேன்!".

"தமிழ்மொழி உலகின் தலைசிறந்த செம்மொழிகள் நான்கிலே ஒன்று - இவ்வாறு நான் குறிப்பிடுவதற்கு, அதனுடைய தொன்மையோ, கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வளம்மிக்க இலக்கியத்தைக் கொண்டு விளங்கியதோ காரணமல்ல; உலகிலுள்ள வளமிக்க மொழிகளிலே அதுவும்ஒன்று என்பதுதான் முக்கியகாரணம்".

"பழங்காலத்தில் மட்டுமன்றி இடைக் காலத்திலும், இக் காலத்திலும் உலகின் சிறப்புமிக்க மொழிகளில் ஒன்றாகத் தமிழ்மொழி விளங்கி வந்துள்ளது. தமிழ்நாடு மட்டுமன்றி ஒவ்வொரு இந்தியனும் பெருமைப்படக்கூடிய அளவிற்கு அதனுடைய இலக்கிய வளம் சிறப்பு மிக்கதாக இருக்கிறது".

"இப் பல்கலைக் கழகம் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடுமென்று துணைவேந்தர் குறிப்பிட்டார். பண்பாடு என்றால் என்ன? அது பல வகைகளிலே வெளிப்படுகிறது. அது நாட்டியத் திலும், இசையிலும், சிற்பத்திலும், ஓவியத்திலும், உரை நடையிலும், கவிதையிலும், சிறு கதையிலும், புதினத்திலும் வெளிப்படுகின்றது. நாம் இந்தியப் பண்பாடு என்று கூறும்

போது மொழி வளர்ச்சியில், இலக்கியத்தில், நுண்கலைகளில் அடைந்துள்ள உயர்ந்த நிலையை மட்டும் குறிப்பதில்லை. இவை பண்பாட்டின் வடிவங்கள்தாம் என்றாலும் இவற்றிற்கும் மேம்பட்ட ஒன்று உள்ளது".

"நம்முடைய பண்பாடு அல்லது நாகரிகம் 5000 ஆண்டுகளுக்குப் பின்னரும் சிதையாமல் உள்ளது. இந் நாகரிகத்தைப் போன்று எத்தனையோ நாகரிகங்கள் தோன்றி, வளர்ந்து, மறைந்துவிட்டன. பாபிலோனிய நாகரிகம் என்னவாயிற்று? மிகப்பெரிய அசிரிய நாகரிகமும், இரானிய நாகரிகமும் என்னவாயின? எகிப்திய நாகரிகம் என்னவாயிற்று? அவை அனைத்தும் சிறப்புற்று விளங்கின; சில காலத்திற்குப்பின் மறைந்துவிட்டன".

"நாம் நல்லவை எங்கிருந்தாலும் வரவேற்கிறோம். அவற்றை ஏற்றுக் கொள்கிறோம். நம்முடைய பண்பாட்டின் சிறப்பினை நாம் நன்கு உணர்ந்திருப்பதால் நாம் புதியவற்றைக் கண்டு அஞ்சவில்லை. நம்முடைய ஒற்றுமை உணர்வு பிறருடைய கருத்தையும் எண்ணங்களையும் மதிக்கும் தன்மை வாய்ந்தது. எனவேதான் சாக்ரடீசு போன்று இந்தியாவில் ஒருவருக்கும் நஞ்சு கொடுக்கப்படவில்லை".

"பழமையான பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் உறைவிடமாகவும், சிறப்பு மிக்க ஆலயங்கள் விளங்குமிடமாகவும், இசைக்கலை போன்ற பல கலைகள் வளர்ந்தோங்கிய இடமாகவும், வாழ்க்கையின் உயரிய கொள்கைகளை விரும்பிப்போற்றுமிடமாகவும் விளங்கிய இந்நகருக்கு வந்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்".

"இப் பல்கலைக்கழகம் மேன்மேலும் வளர்ந்து சிறப்படைய என்னால் இயன்ற அனைத்தையும் செய்வேன் எனக் கூறித் தஞ்சை மக்களுக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்" எனக் கூறினார்.

முன்னதாக, தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்



டாக்டர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் தம் வரவேற்புரையில்,

"மதிப்பிற்குரிய பல்கலைக்கழக வேந்தர் மேதகு தமிழக ஆளுநர் அவர்களை வரவேற்பதை ஒரு தனிச் சிறப்பாகக் கருதுகிறேன். இன்று தமிழ்ப் பல்கலைக்கழக வரலாற்று ஏட்டிலே பொன்னெழுத்துகளில் பொறிக்கப்பட வேண்டிய நாள். உலகப் புகழ்பெற்ற ஓர் அறிஞர் நம்முடைய வேந்தராக இருப்பது நம்முடைய நல்வினைப்பயன். அதனை எண்ணி நாம் உரிமையோடு பெருமைப்படலாம். அவர் வரலாற்று ஆசிரியர் மட்டுமல்லர்; வரலாற்றை உருவாக்கியவரும் ஆவார். அவருடைய சொற்பொழிவாற்றும் திறன், சிறப்பாகப் பழகும் தன்மை, பண்பட்ட பயிற்றுவிக்கும் ஆற்றல், அன்பான இயல்பு ஆகியவை இன்றும் நினைவுகூரப்படுகின்றன. இத்தகைய சிறப்புமிக்க ஓர் ஆளுநரின் தலைமையின்கீழ் தமிழ்நாடு மேலும் மேலும் வளர்ந்து புகழேணியின் உச்சிக்கே செல்லும் என்பதில் ஐயமில்லை".

"இந்தப் பல்கலைக்கழகம் புனிற்றிளம் பருவத்தில் உள்ளது. இது தொடங்கி ஏழு ஆண்டுகளே ஆகின்றன என்றாலும், கடந்த ஆண்டுகளிலே குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இது பிற பல்கலைக் கழகங்களின்றும் வேறுபட்டுத் தனித்தன்மையுடன் விளங்குகிறது. இது தமிழ் மொழி இலக்கியம் ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக மட்டுமன்றித் தமிழ்க்கலை, சிற்பம், ஓவியம், நாட்டியம், நாடகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், இசை, சமயம், நாட்டுப்புறவியல், மலைவாழ் மக்களியல் ஆகிய துறைகளின் முன்னேற்றத்திற்காகவும் தோற்றுவிக்கப்பட்டு உள்ளது".

"சுருங்கச்சொன்னால் இந்த நாட்டின் பழம்பெருமை மிக்க பண்பாடுகள் அனைத்தையும் பாதுகாப்பதுமட்டுமன்றி அவற்றைப் பரப்புகின்ற நோக்கத்தையும் இது அடிப்படையாகக் கொண்டு, இளைய தலைமுறையினரின் இளம் உள்ளங்களில் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டுணர்வையும் வளர்க்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது".

"ஆற்றலும் திறமையும் மிக்க மேதகு தமிழக ஆளுந ருடைய தலைமையின்கீழ் இப்பல்கலைக்கழகம் மேன்மேலும் வளர்ச்சியுற்றுச் சிறந்து விளங்குமென்று நம்புகிறேன். நான் இந்த நேரத்திலே நம்முடைய மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் உதகையிலுள்ள மலை இன மக்கள் ஆய்வு மைய அருங்காட்சியகத்திற்கு உரூ. 100 இலட்சம் தமிழ்நாடு அரசின் பங்காகக் கொடுத்திருப்பதை நன்றியுடன்குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டின் முதற் பெண்மணி திருமதி அலெக்சாண்டர் அவர்களையும் பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் முத்துக்குமரன் அவர்களை யும் ஆட்சிக்குழு உறுப்பினர்களையும், மாவட்ட ஆட்சியாளர், பல்கலைக் கழகப் பணியாளர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்", எனக் குறிப்பிட்டார்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்ட புதிய நூல் களைப் பெற்றுக்கொண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ச. முத்துக்குமரன் பேசுகையில்,

"தமிழ்ப் பல்கலைக்கழகம் இன்று நான்கு புதிய நூல்களை வெளியிடுகிறது. அவற்றிலே ஒன்று வாழ்வியற் களஞ்சியம். ஒரு மொழியிலே ஒரு களஞ்சியம் வெளிப் படுகிறது என்றால் அது மொழியின் சிறப்பு நிலையைக் குறிக்கின்றது. மேலை நாடுகளில் இத்தகைய நூல்கள் பல உள்ளன. கலைக் களஞ்சியத்தைப் பார்த்தால் எந்தப் பொருளைப் பற்றிய செய்தியையும் முழுமையாக அறிந்து கொள்ள முடியும். அத்தகைய ஒரு சிறந்த நூலைத் தமிழ் மொழியிலே வெளியிடுவது தமிழ்மொழிக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் செய்யும் பெரும் தொண்டாகும். இராகங்களின் தன்மைகளை விளக்குகிற ஆய்வுநூல் ஒன்றும் மூவர் திருமுறைப் பாடல்களுக்குப் பண்ணும் தாளமும்கூடிய குறிப்புகள் அடங்கிய நூல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளன. வியாசரும் வில்லியும் என்ற ஒரு ஒப்பீட்டுத் திறனாய்வு நூலும் இன்று வெளியிடப்பட்டுள்ளது. இத்தகைய சிறந்த நூல்களை வெளியிட்டுத் தமிழுக்குச் சிறந்த பணியாற்றுகிற தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நான் வாழ்த்துகிறேன்" எனக் கூறினார்.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பெ. சின்னையன் நன்றிகூற விழா இனிது முடிந்தது.

இந்திய விடுதலையின் நாற்பதாம் ஆண்டு நிறைவு விழா

<u>கருத்தரங்கம்:</u>

இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்

'வாழ்க்கையில் கடமைகளைச் செய்பவன் முன்னேறு வான், கடமையில் தவறுபவனைத் தூக்கி நிறுத்தினால்கூட அவன் முன்னேறமாட்டான்' எனத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் 26-4-'88 செவ்வாயன்று தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும் என்னும்தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கின் தொடக்க விழாத் தலைமையுரையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில், 'முன்னேற்றமடையாத நாடுகள் சிலவற்றில் மக்கள் எவ்வாறு சோம்பிக் கிடந்தனர் என்ப தையும், கடமையைச் செய்து உயர்வைப் பற்றிச் சிந்திப்ப வர்களே உயர்நிலையடைய முடியும்' என்பதையும் விளக்கிக் கூறினார். மேலும் 'ஆபிரகாம் லிங்கன் தாழ்ந்த நிலையி லிருந்தபோதும் அவருக்கு உயர்நிலைக்குச் செல்ல வேண்டு மென்ற எண்ணம் இருந்தது. சாதாரண கடையில் எடுபிடி ஆளாக இருந்தபோதே வெள்ளை மாளிகையில் 5 ஆண்டாவது வாழ வேண்டுமென்ற எண்ணம் நிக்சனுக்கு ஏற்பட்டது. புத்த மதப் பிடியிலிருந்து விடுபட வேண்டு மென்ற எண்ணத்தால்தான் எளிய இனிய இசையில் பக்திப் பாடல்கள் (தேவாரம் முதலியன) தோன்றின' என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்,

'இருபதாம் நூற்றாண்டிலே ஏற்பட்ட விடுதலை உணர்வு நல்ல கவிதைகளை, கட்டுரைகளை, உரைநடை களை உண்டாக்கியது. தொடர்ச்சியாக நல்ல இலக்கியங் களைக் கொண்ட ஒரு சில மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று' என்ற கருத்து தெரிவித்தார்.

அடுத்து அரிய கையெழுத்துச் சுவடித்துறைத் தலைவர் முனைவர் சுப்பிரமணியம் பேசுகையில் விடுதலை இயக்க வரலாறுபற்றி விளக்கமாகக்கூறி, 'ஐரோப்பியர் தாக்கம் முதலில் தமிழ்நாட்டில் — சென்னையில்தான் ஏற்பட்டது என்றும் ஆங்கில ஆட்சிக்கு முதல் எதிர்ப்பு தோன்றிய இடம் தமிழகம்தான்' என்றும் எடுத்துரைத்தார்.

முன்னதாக வரவேற்றுப் பேசிய தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளர் முனைவர் பெ. சின்னையன் விடுதலை இயக்க வரலாறு பற்றி விரிவாகக் கூறினார். துணைப் பதிவாளர் திரு இரா. சுப்பராயலு நன்றி கூறினார்.

இக் கருத்தரங்கில் மூன்று அமர்வுகள் முனைவர் சோ. ந. கந்தசாமி, முனைவர் சி. சுப்பிரமணியன், முனைவர் வே. காந்தையன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றன.

<u>கவியரங்கம்:</u>

'பாரத நாட்டின் பல்துறை வளர்ச்சி' என்னும் பொருள்பற்றி முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன், தஞ்சாவூர்க் கவிராயர், திரு நா. விசுவநாதன், திரு சொ. சொ. மீ. சுந்தரம், திருமதி இந்திராகுமரன், முனைவர் பாலசுப்பிரமணியன் (சிற்பி), முனைவர்

தமிழ்ப் பல்கலைக் கழகச்
செய்தி மலர்
திங்களிதழ்
பதிவெண் 15033/82X1

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 007.
தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

...போசி
...ாலகம்

இராமையன், முனைவர் சி. மெய்கண்டான் ஆகியோர் கவிதைகள் வழங்கினர்.

இவ்விழாவினை நிறைவு செய்ய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இசை நிகழ்ச்சி

நாகசுர [illegible] நிகழ்ச்சியை அடுத்து, தமிழ்ப் பல்கலைக்கழக [illegible] துறைப் பேராசிரியர் அ. தனபாண்டியன், தாம் உருவாக்கிய புதிய இராகங்கள் சிலவற்றைப் பாடிக் காட்டினார். திருமதி ஞானகுலேந்திரன் திருமுறைப் பாடல்களைப் பாடினார்.

நாடகம்:

தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத் துறை விரிவுரையாளர் திரு இரா. இராசு இயக்கிய 'நந்தன் கதை' என்னும் நாடகம் நடைபெற்றது.

தமிழறிஞர் டாக்டர் அ.சி. செட்டியார் நினைவு அறக்கட்டளை

'இருபதாம் நூற்றாண்டில் தமிழில் பொற்காலம் தோன்ற உழைத்தவர்களில் டாக்டர் அ.சி. செட்டியார் குறிப்பிடத் தக்கவர்' எனத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் 18-4-'88 திங்களன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடந்த டாக்டர் அ.சி. செட்டியார் அறக்கட்டளை நிறுவும் விழாவில் தலைமையுரையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் 'டாக்டர் அ.சி. செட்டியார் தமிழுக்காக வாழ்ந்தவர். தமிழுக்காகத் தம் வாழ்வையே அர்ப்பணித்தவர் என்றும் அவரது பேச்சும் செயலும் மிடுக்கான தோற்றமும் இளம் உள்ளங்களில் உத்வேகத்தையும் துடிப்பாற்றலையும் தோற்றுவிக்கும் திறம் வாய்ந்தவை' என்றும் கூறினார்.

விழாவில் முதுமுனைவர் ச. தண்டபாணி தேசிகர் 'திருக்குறள் பொதுமறை' என்னும் பொருள்பற்றி ஆய்வு அடிப்படையில் பல அரிய கருத்துக்களை எடுத்துரைத்தார். முனைவர் கா. மீனாட்சி சுந்தரம், தமிழறிஞர் அ.சி. செட்டியாரின் சிறப்பியல்புகள் பற்றியும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவருடைய மாணவராகவும் அவருடன் பணியாற்றிய ஆசிரியராகவும் இருந்த நாள்களை நினைவு கூர்ந்து அக்காலத்தில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள்பற்றியும் எடுத்துரைத்தார். பேராசிரியர் செ. வைத்தியலிங்கம் 'குருபக்தி' என்னும் தலைப்பில் பேசும்போது 'தம் வாழ்க்கையில் குறிக்கோளில்லாது திசை மாறிச் சென்ற போது தமிழில் ஈடுபாடும் சிந்திக்குந் திறமும் கொள்ளுமாறு செய்து உயர்த்தியவர் டாக்டர் அ.சி. செட்டியார்', எனக் குறிப்பிட்டார். அறிவியல் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் இராம. சுந்தரம் நன்றி நவில விழா முடிவுற்றது.

வயது வந்தோர் கல்வித்துறை - பணிப்பட்டறை

வயதுவந்தோர் கல்வித்துறை மேற்பார்வையாளருக்கான ஒரு நாள் பணிப்பட்டறை தேசிய எழுத்தறிவு இயக்கத்தையொட்டி 5-5-'88 அன்று தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. அரசு, மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழக வயது வந்தோர் கல்வி மையங்களைச் சேர்ந்த மேற்பார்வையாளர்கள் இப் பணிப்பட்டறையில் பங்கேற்றனர். பணிப்பட்டறைத் தொடக்க விழாவிற்கு வயது வந்தோர் கல்வித்துறையின் மதிப்புறு இயக்குநர் பொறுப்பிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைப் பதிவாளர் திரு இரா. சுப்பராயலு தலைமையேற்க, தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பெ. சின்னையன் தொடக்கவுரையாற்றினார். திறமையான மேற்பார்வையாளருக்குத் தேவையான தகுதி என்ன என்பது இப்பணிப் பட்டறையின்மூலம் கண்டறியப்பட்டது. விழா, தொடக்கத்தில் திட்டஅலுவலர் திரு சி. சுப்பிரமணியன் வரவேற்புரையாற்றினார். திட்ட அலுவலர் திரு செல்வ பீட்டர் சுந்தரராஜ் நன்றியுரையுடன் பணிப்பட்டறை நிறைவுற்றது.

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் - 613 001